2013 அக்டோபர் 30] [திரு. கே.சி. வீரமணி]

எழுத்து மூலமாக உத்தரவாதம் அளித்துள்ளார்கள். அதன் அடிப்படையில் அப்போதைய துணை வேந்தர் இந்தத் தேர்வை நடத்தி அந்தத் தேர்வின் முடிவுகளையும் வெளியிட்டுள்ளார்கள். இதற்கு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின் பொதுக் குழு ஒப்புதலும் அளிக்கப்படவில்லை. இருப்பினும் மருத்துவக் கல்லூரியைப் பொறுத்தவரையில், அங்கீகாரம் என்பது இந்திய மருத்துவக் குழுமத்தின் அங்கீகாரத்திற்கு உட்பட்டதாகும். ஒரு தனியார் மருத்துவக் கல்லூரியின் விளம்பரத்தின் அடிப்படையிலோ, வருங்காலத்தில் அங்கீகாரம் பெறும் என்ற வாக்குறுதியின் அடிப்படையிலோ மாணவர்கள் தனியார் மருத்துவக் கல்லூரியில் சேரக் கூடாது, மேலும், இந்திய மருத்துவக் குழுமத்தின் அங்கீகாரம் இல்லாத மருத்துவக் கல்வியைத் தொடர்ந்தால்கூட அவர்களுக்கு எம்.பி.பி.எஸ். பட்டம் அளிக்க இயலாது என்று திட்டவட்டமாக இந்திய மருத்துவக் குழுமம் தெளிவுபடுத்தி ஒரு பொது அறிவிப்பை எம்.சி.ஐ. வெப்சைட் மூலம்கூட வெளிப்படுத்தியுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. அறிக்கை அளித்தல்

அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர்.

திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“குடிதழீஇக் கோல்ஓச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு.”

குடிமக்களை நன்கு பாதுகாத்து, நீதி நெறி தவறாது நல்லாட்சி செய்யும் அரசினுடைய அடிகளைப் பொருந்தி இவ்வுலகம் நடக்கும் என்ற வான்புகழ் கொண்ட வள்ளுவனின் குறளுக்கு இலக்கணமாய், சாதிக்கு ஒரு நீதி என்றில்லாமல், சகலருக்கும் ஒரே நீதி என்ற சமதர்ம சமுதாய நெறி காத்து, இவ்வுலகத்தின் உயிர்குலத்தை தன் உயிருக்கும் மேலாக நேசித்து, போற்றி,

[திரு. ஆர்.பி. உதயகுமார்] [2013 அக்டோபர் 30

பாதுகாத்து நீதிநெறி தவறாது இந்த நாடும், இந்த உலகமும் போற்றி வாழ்த்துகின்ற புனித ஆட்சி நடத்தி வருகின்ற எங்கள் உயிருக்கும் மேலான தெய்வத் தலைவியே, வாழும் பசும்பொன்னே, மாண்புமிகு அம்மா, (மேசையைத் தட்டும் ஒலி) தங்கள் சுண்டுவிரல் நீட்டி சுட்டிக்காட்டுகின்ற திசையிலே இந்த உலகம் பயணிக்கும் அந்தப் பொன்னான நாள் வெகு விரைவிலே மலரும், மலரும் என சூளுரைத்து தாயே, அம்மா, தங்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே 2013–2014 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் 96–வது அறிக்கையை அரசு உறுதிமொழிக் குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கின்றேன்.

6. அறிவிப்புகள்

(அ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2013 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2013

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.